# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 15–02–2018–ம் தேதி வியாழக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

பொருள் எண். 1

தமிழ்நாடு தொகுதி மறு வரையறை ஆணையாளர் கடிதம் எண்.1/2017, நாள் 12–09–2017–ல் கண்டுள்ள வழிமுறைகள் படியும், மாவட்ட மறுவரையறை அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படியும் குழித்துறை நகராட்சியில் 21 வார்டுகளுக்கும் 2011–ம் ஆண்டின் சொத்துவரி கேட்பு பதிவேட்டின் அடிப்படையிலும், வார்டு மறுவரையறை செய்யப்பட்டு, நகர்மன்றத் தீர்மான எண்.3008, நாள்: 15–12–2017–ன்படி மன்றத்தின் ஒப்புதல் பெற்றும் தமிழ்நாடு மறுவரையறை ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் படியும் வரைவு மறுவரையறை கருத்துரு . 29–12–2017 அன்று வெளியிடப்பட்டு பெறப்பட்ட ஆட்சேபனைகளின் மீது 8–2–2018–ம் தேதிய மாநில மறுவரையறை ஆணையர் சென்னை அவர்களின் கருத்து கேட்புக்கூட்டத்தில் அறிவுறுத்தியபடி சரி செய்யப்பட்டு இறுதி வரைவு வார்டு வரையறை கருத்துரு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3032**
**அனுமதிக்கப்பட்டது.**

**குழித்துறை நகர் மன்றத்தின் 27–02–2018–ம் தேதி செவ்வாய்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் 2018–2019 முதல் 2020–2021 வரை மூன்றாண்டு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மூலம் 30–12–2017 மற்றும் 23–01–2018–ல் மாலைமலர் பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் மேற்படி பத்திரிகைக்கு ரூ.7056/– + ரூ.6804 = 13860/– வழங்கலாம்.
அ.கு. :– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3033**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 2

மார்த்தாண்டம் காய்கறி சந்தையில் உள்ள ஆலமரத்தின் கிளைகள் ஒட்டுக்கூரையில் சாய்ந்த காரணத்தினால் அதனை வெட்டி அப்புறப்படுத்த உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்.

1) திரு.என். தாம்சன் – ரூ. 3800
2) திரு.சி ராஜகோபால் – ரூ. 3500
3) திரு.எ. சத்தியநேசன் – ரூ. 3600

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி. ராஜகோபால் என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கி மரக்கிளைகள் முறித்து அப்புறப்படுத்திய வகைக்கு ரூ.3500/– திரு.சி. ராஜகோபால்–க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3034**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியான மார்த்தாண்டத்தில் தற்போது நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் மார்த்தாண்டம் மார்க்கட் பகுதியிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளிலுள்ள வினியோக குழாய்களை தற்காலிகமாக மாற்றி புதியதாக பதிக்கப்பட்ட வினியோக குழாய் வாயிலாக வழங்கவும், பம்மம் பகுதியிலுள்ள நீரேற்றுகுழாய் 5” சி.ஐ. பழுது ஏற்படுவதால் இப்பகுதியில் 5”pvc குழாயினை தற்காலிகமாக மாற்று வழியில் பொருத்த பம்மம் OHT-க்கு நீரேற்றம் செய்யவும் மதிப்பீடு ரூ.1,20,000/–ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி

குடிநீர் பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3035**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சி பகுதிகளில் ஒகிபுயல் தாக்குதல் காரணமாக வார்டு 2, 12–ல் நெடும்போக்கி கோவில் தெரு, பனங்கூடல்விளை பகுதிகளில் Mini Power Tank (HDPE) உடைந்துள்ளது. எனவே மேற்படி புயல் காரணமாக பழுதடைந்த சுற்றுச்சுவர் மற்றும் HDPE Tank சரி செய்வதற்கு ரூ.70,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3036**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெறுவதால் குடிநீர் குழாய்கள் பழுதடைந்து குடிநீர் வீணாகிறது. மேலும் கழுவன்திட்டை மற்றும் காட்டுவிளை நீர்த்தேக்க தொட்டிகளில் சுலீஸ் வால்வு பழுதடைந்துள்ளது. மேலும் வடக்கு தெரு குட்ஷெப்பர்டு மேல்நிலை பள்ளி அருகே உள்ள சுலீஸ் வால்வு, வடக்கு தெரு தேவன்விளை பகுதியில் சுலீஸ் வால்வு பழுதடைந்துள்ளது. மேற்கண்ட பழுதுகள் நீக்கம் செய்ய மதிப்பீடு ரூ.85,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிலையில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3037**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 3–ல் தாலுகா அலுவலகம் மற்றும் நிதிமன்றம் சந்திப்பு பகுதியிலுள்ள திறந்தவெளி கிணற்றில் சேறு நிறைந்துள்ளதால் குடிநீர் மாசுபட்டு சுவை குறைவாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன்கருதி மேற்படி கிணற்றை தூர்வாரி சுத்தம் செய்யவும், கிணற்றில் மூடப்பட்டுள்ள grill cover-ல் Weld mesh அமைக்கவும் ரூ.30,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3038**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 7

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு 3 கழுவன்திட்டை ஆர்.சி.தெருவில் 4” pvc குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. மேலும் இடைத்தெருவில் அங்காள அம்மன்கோவில் முதல் மீன் மார்க்கட் வரையிலும் 4” pvc குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. எனவே குடிநீரின் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மேற்படி பகுதியும் பொதுமக்கள் நலன்கருதியும் மேற்படி பகுதிகளில் புதிதாக 4” pvc குழாய் பதிப்பதற்கும், தோண்டப்படும் சாலை பேவர் பிளாக் சாலையாக இருப்பதால் பேவர் பிளாக் Relaying செய்வதற்கும் ரூ.1,90,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3039**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநிர் சுத்திகரிப்பு பணிகள் செய்திட பொருத்தப்பட்டுள்ள Liquid Chlorinater–க்கு தேவையான Bleaching Liquid வாங்கி பயன்படுத்தி சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ள Liquid Chlorinater–க்கு தேவையான Bleaching Liquid ஒராண்டிற்கு வாங்குவதற்கும் மற்றும் கூடுதலாக 1000 litre கொள்ளளவு கொண்ட Water storage tank வாங்கவும் ரூ.6,00,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3040**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடம் மற்றும் கணினி பிரிவிற்குரிய கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் பராமரிப்பு செய்யப்பட வேண்டியுள்ளதால் வருடாந்திர பராமரிப்பு ரூ.75,000/–க்கு உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3041**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 10

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் 40 KVA ஜெனரேட்டர்கள் 3 எண்ணம், 45 KVA ஜெனரேட்டர் 1 எண்ணம் மற்றும் அலுவலக பயன்படுத்தப்படும் 15 KVA ஜெனரேட்டர் ஆகியவற்றில் ஆயில் Service Periodically செய்ய வேண்டியிருப்பதால் ஒரு வருட பராமரிப்பிற்கு ரூ.2,10,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3042**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் திட்டப்பணிகள் மேற்கொள்ள 23–01–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர்/ ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | வார்டு 3 கழுவன்திட்டை ஆர்.சி.தெருவில் பேவர் பிளாக் சாலை மற்றும் தார் சாலை செப்பனிடும் பணி செய்தல் | 7.80 | 1) எ. ஆன்றணி 0.81% அதிகம்<br>2) எ. விஜயகுமார் 0.02% குறைவு |
| 2 | வார்டு 12 சிங்கிளேயர் சர்ச் முதல் கண்ணக்கோடு கிருஷ்ணன் கோவில் வரையுள்ள தார் சாலை செப்பனிடும் பணி செய்தல் | 8.50 | 1) பி. தேவராஜன் 0.17% அதிகம்<br>2) எ. ஜெயராஜன் 0.05% குறைவு |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 –ல் திரு.சி. விஜயகுமார், வரிசை எண்.2–ல் திரு.பி. ஜெயராஜன் ஆகியோர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3043**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சியின் Water Supply Distribution Network சம்பந்தமான Zonation Map Auto cad (size A1)–ல் தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் 3 நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி Map–ல் திருத்தங்கள் செய்து 3 நகல்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க மண்டல செயற்பொறியாளரால் அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 3 நகல்கள் எடுக்கப்பட்ட வகைக்கு ரூ.7,350/– பொதுப்பணி மேற்பார்வையாளரால் செலவிடப்பட்டுள்ளது. இத்தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3044**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார வாகனம் TN75L 5874–ன் பேட்டரி பழுதடைந்துள்ளதால் புதிய பேட்டரி வாங்குவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) சேவியர் பேட்டரி எலக்டிரிக்கல்ஸ் ஒர்க்ஸ் – 7200
2) மணிக்கம் பேட்டரி ஒர்க்ஸ் – 7000

அ.கு.:–வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் பணிக்கம் பேட்டரி ஒர்க்ஸ் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3045**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 14</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதார வாகனம் TN75L.5874–ன் HYdravlic lever–ல் ஏற்பட்டுள்ள பழுதினை Popular Motor Works Marthandam மூலம் பழுது நீக்கம் செய்யப்பட்ட வகைக்கு ரூ.1065/– திரு.த. சுந்தர்சிங் ஒட்டுநரால் செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.1065/–ஐ திரு.த. சுந்தர்சிங் ஒட்டுநருக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3046**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 15</u>

குழித்துறை நகராட்சியின் Water Supply distributiln Network (Pumping line, Distribution line, OHT details, Bore details, Public fountain, Value details) சம்பந்தமான Map Auto cad(size 1) ல் தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் 3 நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி Map Auto cad- ல் வரையப்பட்ட வகைக்கும், A4.size- ல்

Print எடுத்த வகைக்கும் ரூ.10,950/— பொதுப்பணி மேற்பார்வையாளரால் செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து பொதுப்பணி மேற்பார்வையாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :— மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3047**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 16</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தெருமின் விளக்குகளை பராமரிப்பு செய்ய மின்சாதன உதிரிப் பொருட்கள் ஒரு வருடத்திற்கு வாங்குவதற்கு மதிப்பீடு ரூ.10,00,000/—க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மின்சாதன உதிரிப்பொருட்கள் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :— மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3048**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 17</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17—ல் கோடியாவிளை சாலை மண்சாலையாக இருப்பதால் மழைக்காலங்களில் சேறும் சக்தியுமாக பொதுமக்கள் நடந்து செல்ல இயலாத நிலையிலுள்ளது. மேலும் அட்டைக்குளம் செல்லும் சாலையிலுள்ள பேவர் பிளாக் சாலையை சரி செய்வதற்கும், கோடியா விளையில் புதியதாக பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கும் உத்தேச மதிப்பீடு ரூ.4,70,000/—க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :— மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3049**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 18</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கலவை உரக்கிடங்கில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள Windrows Plat form-ல் உரம் தயாரிக்கும் கூடம் அமைக்கும் பணிக்கான 1—2—2018—ம் நாளய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக்கட்டணம் ரூ.6300/— தினமுரசு நாளிதழுக்கும், ரூ.10,017/— தினமலர் நாளிதழுக்கும் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :— மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3050**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 19

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் 1–4–2018 முதல் 31–3–2021 முடிய மூன்றாண்டு காலங்களுக்கு 7–2–2018 அன்று மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வரிசை எண்.1 முதல் 9 இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வரிசை எண் | குத்தகை இனம் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | மார்த்தாண்டம் காய்கறி சந்தை கண் இருக்கும் ஆடு, மாடு, கோழி அடிக்கும் சாலைக்கு கட்டணம் வசூலிக்கும் குத்தகை உரிமம் | 1) திரு.எம். மனோகரன்<br>2) திரு.எஸ். ஜெபதாஸ் | 144100<br>139500 |
| 2 | மார்த்தாண்டம் காய்கறி சந்தை கட்டண கழிப்பறை மற்றும் பி.பி.முனிசாமி வணிகவளாக கட்டண கழிப்பறை குத்தகை உரிமம் | 1) திரு.சி. ராஜாமணி<br>2) திரு.எம். மனோகரன் | 42000<br>45100 |
| 3 | பேரூந்து நிலையம் வந்து செல்லும் பேரூந்துக்களிலிருந்து கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | |
| 4 | மார்த்தாண்டம் பழைய தியோட்டர் சந்திப்பிலுள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் கல்பாலத்தடியில் அமைந்துள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | |
| 5 | மார்த்தாண்டம் மினிபார உந்து நிலையம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | |
| 6 | குழித்துறை மாலை சந்தை மற்றும் குழித்துறை அம்மன்கோயில் பக்கம் உள்ள இடஙகளில் பொருட்களை விற்பனை செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | |
| 7 | மார்த்தாண்டம் லாறிப்பேட்டை கழிப்பறை கட்டணம் வசூல் குத்தகை உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | |
| 8 | மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள இருசக்கர வாகன காப்பகம் குத்தகை உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | |
| 9 | குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வி.எல்.சி. கலையரங்கம் குத்தகை உரிமம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை | |

அ.கு.:– குத்தகை இனமான மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி வரிசை எண்.3 முதல் 9 வரையுள்ள இனங்களுக்கு எவரும் வைப்புத் தொகை செலுத்தவில்லை. ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை

எண்.1 மற்றும் இரண்டிற்கு இருநபர்கள் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை கடந்த வருட குத்தகை தொகையினை விட அதிகமாக இருப்பதால் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3051**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 20</u>

குழித்துறை நகராட்சியில் **31–01–2018** முதல் தட்டச்சர் பணி காலியாக உள்ளதால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.D.Dis.A1/11111/2017, நாள் **10–04–2017**–ன்படிதற்காலிமாக தினக்கூலி அடிப்படையில் தட்டச்சு பணிகள் செய்ய **19–02–2018** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

1) C. Suresh, - ரூ.475/–
S.S.S.Contractor work,
Kannacode,
Marthandam.

2) D. Rajesh Kumar, - ரூ.480/–
Pulinintavilai,
Kalluketty,
Kuzhithurai

3) D. Justin Kumar, – ரூ.460/–
Govt. Contractor,
12/85 Devasahaya Bhavan,
Thiruvananthapuram Road,
Kuzhithurai.

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3–ல் திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3052**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 21</u>

J.E.R.பிரியதர்சினி என்பவரால் சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக்கிளையில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு C.P.(MD)No.319/2014 in W.P.No.537/2013-ற்கு **12–02–2018** அன்று நகராட்சி ஆணையாளர் சார்பில் ஆஜராகிய வகைக்கு வழக்கு கட்டணம்

ரூ.7500/– வழங்க Additional Government Pleader திரு.எஸ். குணசீலன் முத்தையா **10–02–2018–ம்** நாளைய கடிதத்தில் கோரியுள்ளார். மேற்படி வழக்கு கட்டணம் அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3053**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 22</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் **10–02–2018** அன்று தினமணி பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விளம்பர கட்டணமாக Expres Publication Madurai Ltd. என்ற நிறுவனத்திற்கு ரூ.**31635/–** வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3054**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 23</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வானம் TN75P.1813-ற்கு தகுதிச்சான்று புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.**58275/–**ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திலுள்ள பழுதுள் நீக்கம் செய்யவும் அதற்கான தொகை ரூ.**58275/–** வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3055**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 24</u>

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் செய்வதற்கு **2–2–2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர்/ ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| **1** | வார்டு **6–ல்** இடக்குளம் சாலையின் அருகில் வடிகால் அமைத்து மூடு சிலாப் அமைக்கும் பணி செய்தல் | **6.80** | **1)** திரு.எஸ். ராஜேஷ் **0.02%** குறைவு<br>**2)** திரு.சி. சுரேஷ் **6.45%** அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 2 | வார்டு 2 கலையன்குளம் வள்ளிக்கோட்டு குளம் அருகிலுள்ள நரியன்விளை சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 9.80 | 1) திரு.கே. கோபுகுமார் 0.10% குறைவு<br>2) திரு.பி. தேவராஜன் 0.21% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 –ல் திரு.எஸ். ராஜேஷ் மற்றும் வரிசை எண்.2–ல் திரு.கே. கோபுகுமார் ஆகியோர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3056**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 25</u>

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் செய்வதற்கு 6–2–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர்/ ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | வார்டு 17–ல் அட்டைக்குளம் சாலையில் புதியதாக வடிகால் ஒடையின் Vent Portion-ஐ பெரியதாக்கி சாலையின் நடுவில் வடிகால் ஒடை அமைத்து சிலாப் அமைக்கும் பணி செய்தல் | 9.30 | 1) திரு.கே. தேவராஜ், ஆலம்பாறை – 0.25% குறைவு<br>2) திரு.பி. பிரேம்குமார் 3.12% அதிகம் |
| 2 | வார்டு 17 மற்றும் 18–க்குட்பட்ட கீழ்பம்மத்தில் பொற்றைவிளை தார் சாலை ஒட்டுப்பணி செய்தல் | 2.00 | 1) திரு.கே. பைஜீ 0.02% குறைவு<br>2) திரு.எ. ஆன்றணி 1.72% அதிகம் |
| 3 | வி.எல்.சி. ஆடிட்டோரியத்தில் Meter Board பழுதடைந்துள்ளதை சரி செய்ய புதிய உபகரணங்கள் வாங்கி பொருத்தும் பணி செய்தல் | 0.40 | 1) திரு.எம். தாம்சன் 0.04% குறைவு<br>2) திரு.சி. சுரேஷ் 10.31% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 –ல் திரு.கே. டேவிட், வரிசை எண்.2 திரு.கே. பைஜீ மற்றும் வரிசை எண்.3–ல் திரு.என். தாம்சன் ஆகியோர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3057**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 26

குழித்துறை நகராட்சிப் பகுதிகளில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 9–2–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர்/ ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள ஏரியேட்டர் அறையில் பழுதடைந்த பொருட்களை மாற்றி புதிய பொருட்கள் பொருத்துதல் | 0.25 | 1) திரு.சி. சுரேஷ் – 0.34% குறைவு<br>2) திரு.என். தாம்சன் –11.26% அதிகம் |
| 2 | நகராட்சிக்குட்பட்ட காட்டுவிளை OHT-க்கு நீரேற்றம் செய்ய 12.5H.P.நீரேற்றிகள்,கழுவன்திட்டை OHT-க்கு நீரேற்றும் நீரேற்றி Spare மற்றும் Raw water sump மற்றும் செடிமென்டேசன் தொட்டி சுத்தம் செய்வதற்கு தொட்டி சுத்தம் செய்வதற்கு 2 H.P சென்றிபியூகல் நீரேற்றிகள் வாங்குதல் | 2.25 | 1) திரு.என். தாம்சன் – 0.01% குறைவு<br>2) திரு.சி. சுரேஷ் –0.02% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ற் திரு.சி. சுரேஷ் மற்றும் வரிசை எண். 2–ல் திரு.என். தாம்சன் ஆகியோர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3058**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 27

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 13–2–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர்/ ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | மார்த்தாண்டம் காந்தி மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர விளக்கினை மாற்றி மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் நிறுவும் பணி செய்தல் | 1.98 | 1) M/s.T.R. Traders– 0.69% குறைவு<br>2) M/s. Velmurugan Agencies – 0.11% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 M/s.T.R. Traders கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3059**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 28

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணி செய்வதற்கு 14–2–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி முடிவுகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர்/ ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சி பொறியியல் பிரிவு, பொது பிரிவு, வருவாய் பிரிவு கோப்புகளை பராமரிப்பதற்கு ஏதுவாக நவீன முறையில் ஒவ்வொரு எழுத்தருக்கும் தனித்தனியாக Partition wall, Self arrangement, Ground floor stock room அருகில் Dining Hall arrangement செய்தல் | 5.20 | 1) திரு.கே. டேவிட் – 0.08% குறைவு<br>2)திரு.பி.ஜெயக்குமார்–0.02% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே. டேவிட் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3060**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 29

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 16–2–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர்/ ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | வார்டு 15 வடக்கு தெருவிலிருந்து பந்நியணி செல்லும் சாலை தார் தளம் புதுப்பித்தல் | 1.70 | 1)திரு.எ. அனில்குமார்–0.42% குறைவு<br>2) திரு.எ. ஆன்றணி–2.42% அதிகம் |
| 2 | வார்டு 1 படப்பறை குளம் முதல் ஜேக்கப் நகர் செல்லும் சாலை சிமெண்டு தளம் அமைத்தல் | 9.80 | 1) திரு.சி. ராஜன் – 0.07% குறைவு<br>2) திரு.பி. பிறேம்குமார் –0.37% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ற்கு திரு.எ. அனில்குமார் மற்றும் வரிசை எண்.2–ற்கு திரு.சி. ராஜன் ஆகியோர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3061**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 30

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 20–2–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர்/ ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | வார்டு 15 பாஸ்டர்ஸலேன் முதல் பந்நியணி வரை உள்ள சாலை சிமெண்டு தளம் மற்றும் தார் சாலை அமைத்தல் | 8.70 | 1)திரு.பி. தேவராஜன் –0.02% குறைவு<br>2) திரு.பி. ஜெயராஜன்–0.86% அதிகம் |
| 2 | வார்டு 10 தேவிகுமாரி கல்லுாரி செல்லும் சாலை சிமெண்டு தளம் மற்றும் புதிதாக வடிகால் ஓடை அமைத்தல் | 5.70 | 1)திரு.எஸ் .கிறிஸ்துராஜ்–0.03%குறைவு<br>2) திரு.சி. சுரேஷ் –0.86% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ற்கு திரு.பி. தேவராஜன் மற்றும் வரிசை எண்.2–ற்குத் திரு.சி. கிறிஸ்துராஜ் ஆகியோர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3062**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 31</u>

குழித்துறை நகராட்சியில் கீழ்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள 22–2–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர்/ ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சி ஆணையர் அறையில் உள்ள பழுதான Table, Chair மாற்றி புதிதாக Table, Chair வாங்குதல், பொறியாளர் அறையில் Aluminium Anodised partition அமைத்தல், மேற்படி இரண்டு அறைகளிலும் Curtain, Table glass அமைத்தல் | 0.90 | 1)திரு.டி. ஜஸ்டின்குமார்–1.58%குறைவு<br>2) திரு.டி.பிறேம்குமார்–1.44% அதிகம் |
| 2 | அம்மா உணவகத்திலுள்ள Water puritier (RO Plant) சரி செய்தல் Tilting Grinder மற்றும் Gas அடுப்பு சரி செய்தல் | 0.48 | 1) திரு.டி. ஜஸ்டின்குமார்–0.42%குறைவு<br>2) திரு.டி.பிறேம்குமார்–2.34% அதிகம் |
| 3 | குழித்துறை நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தற்கு Panel Board-க்கு Materials சரி செய்தல் | 1.10 | 1) M/s. Rowkal and Co Madurai – 0.83% குறைவு<br>2) M/s. Anantha Enter prises, Madurai 10.73% அதிகம் |

அ.கு.:– வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ற்கு திரு.பி. தேவராஜன் மற்றும் வரிசை எண்.2–ற்குத் திரு.சி. கிறிஸ்துராஜ் ஆகியோர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3063**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 32

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் வரி மற்றும் வரியில்லாத இனங்களில் வசூல் வீவிரப்படுத்தும் வகையில் வாகனம் மூலம் ஒலிப்பெருக்கி உதவியுடன் வசூல் செய்திடவும் பிப்ரவரி 19–ம் தேதி முதல் மார்ச் 31–ம் தேதி வரையில் வாகன அறிவிப்பு செய்திடவும் ஏற்படும் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3064**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 33

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் காலியாக இருக்கும் கடைகளுக்கு 23–02–2018–ல் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. அன்றய தினம் 12 B கடைக்கு இரு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். அதன் விபரம் கீழ்வருமாறு.

| | | மாதவாடகை ரூபாய் |
|---|---|---|
| 1) | திரு.ஆர். ஜார்ஜ்,<br>2/91சி3,<br>புல்லத்துவிளை,<br>கருங்கல் | 2750/– |
| 2) | திரு.டி. சுனிதா,<br>த/பெ. டென்னிசன்,<br>28/65பி5, சிவ<br>மார்த்தாண்டம். | 3050/– |

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறிப்பிட்டுள்ள தொகை அரசாங்க மதிப்பை விட குறைவாக உள்ளதால் 12 B கடைக்கு உரிமம் வழங்க இயலாது. ஆகவே மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தபுள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர் மன்றத்தீர்மான எண். 3065**
**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/–
கே. சௌந்தரம்,
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.